DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | DVC. No. 02/2020 |
| Deposition of witness | : | P. W – 1 |
| Name | : | இலக்கியா |
| Father's /Husband Name | : | தமிழ்ச்செல்வன் |
| Village | : | திருவாஞ்சியம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 35 |
| Occupation | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 17th day June, 2025.
Accused R1, R2, R3 present. R4 exparte. R5 absent Petition U/s 355 filed and allowed.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

இவ்வழக்கின் மனுவை திருவாரூர் மாவட்ட சமூக நலத்துறையில் அளித்தேன் என்றால் சரிதான் அங்கு என்னையும், 1–ம் எதிர்மனுதாரரையும் விசாரித்தார்களா என்றால் ஒருமுறை மட்டும் விசாரித்தார்கள். அவ்வாறு விசாரித்த போது 1–ம் எதிர்மனுதாரர் என்னை இரண்டு குழந்தைகளுடன் அழைத்துச்சென்று வாழவைப்பதாக கூறினாரா என்றால் இல்லை. 1–ம் எதிர்மனுதாரர் என்னையும், எனது குழந்தைகளையும் அழைத்துச்சென்று வாழ தயாராக இருந்தார் என்றாலும், அதற்கு நான் தான் மறுப்பு தெரிவித்தேன் என்றாலும் சரியல்ல. நான் M.A., M.Phil., B.Ed படித்துள்ளேன் என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் 1–ம் எதிரி வீட்டிற்கும் 1/2 கிலோ மீட்டர் இடைவெளி உண்டு. எனது கல்விச்சான்றின்படி எனது வயது 37 ஆகும். திருமணத்தின்போது எனக்கு 25, 1–ம் எதிர்மனுதாரருக்கு 27 வயது இருக்கும். நாங்கள் இருவரும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். திருமணத்திற்கு அழைப்பிதழ்கள் அச்சிடப்பட்டதா என்றால் அச்சிடப்பட்டது. அதனை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணத்தை குறியீடு செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதன் நகல் மட்டுமே உள்ளதால் அது குறியீடு

செய்யப்படவில்லை. 1–ம் எதிர்மனுதாரர் என்ன படித்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். அவர் 11–ம் வகுப்பு படித்துள்ளார். 1–ம் எதிர்மனுதாரரை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் எனது சிறு வயதிலிருந்தே தெரியும். எனக்கு இரண்டு சகோதரிகள் உண்டு. அவர்கள் இருவருக்கும் திருணம் ஆகிவிட்டது என்றாலும், அதில் ஒருவர் கொல்லாபுரத்தில் வசித்து வருகிறார் என்றாலும் சரிதான். நான் தற்பொழுது தற்காலிகமாக கொல்லாபுத்தில் வசிக்கிறேன் என்றால் இல்லை, திருவாஞ்சியத்தில் வசிக்கிறேன். நான் கொல்லாபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியையாக உள்ளேன் என்றால் சரிதான். எனது இரண்டு குழந்தைகளும் தற்போது திருவாஞ்சியம் அரசு பள்ளியில் பயின்று வருகிறார் என்றால் சரிதான். நான் கொல்லாபுரத்திற்கு பேருந்தில் செல்வேன். எனது கல்விச்சான்றிதழ்கள் எனது வீட்டில் உள்ளது. என்னை 1–ம் எதிர்மனுதாரர் திருமணம் செய்துகொண்ட காலகட்டத்தில் நான் என்ன படித்து வந்தேன் என்றால் M.A. M.Phil படித்து முடித்துவிட்டேன். திருமணத்திற்கு பிறகு தான் நான் B.Ed., முடித்தேன் என்றால் சரிதான். நான் 23–ம் வயதிலிருந்து 1–ம் எதிர்மனுதாரரை காதலித்து வந்தேன். நான் காதலித்தபோது 1–ம் எதிர்மனுதாரர் 11–ம் வகுப்பு படித்து வந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் 1–ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்த போது அவர் குறைந்த படிப்பு படித்த விபரத்தை கூறி குதற்றமாக பேசுவேன் என்றால் சரியல்ல. அவ்வாறு பேசியதால் தான் எங்களுக்குள் கருத்துவேறுபாடு ஏற்பட்டு வாழவில்லை என்றால் சரியல்ல. எனக்கும், 1–ம் எதிர்மனுதாரருக்கும் 02.09.2014–ம் தேதி திருமணம் நடந்தது என்றால் சரிதான். எனக்கும், 1–ம் எதிர்மனுதாரருக்கும் மாப்பிள்ளை குப்பம் சந்து மாரியம்மன் கோவிலில் திருமணம் நடந்தது. மேற்படி திருமண நாள் மற்றும் இடத்தை தான் திருமண அழைப்பிதழில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது திருமணத்தின்போது எனது தாயார் 10 பவுன் நகையை எனக்கும், எதிர்மனுதாரருக்கும் சேர்த்து வரதட்சணையாக கொடுத்தார். அந்த நகைகள் எந்த கடையில் வாங்கியது என்று தெரியுமா என்றால் தற்போது நினைவில்லை.

நான் தவறான தகவல்களை மனுவில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. திருமணம் முடிந்து 1–ம் எதிர்மனுதாரர் மூன்று இலட்சம் பணம் கேட்டு நான் ஐம்பதாயிரம் பணம் கொடுத்தேன். திருமணத்தின்போது இருசக்கர வாகனம் 1–ம் எதிர்மனுதாரருக்கு வாங்கி கொடுக்கப்பட்டது. அதன் பதிவு எண் தற்போது தெரியுமா என்றால் பதிவெண் தெரியும் முன்பே பிரிந்துவிட்டோம். இருசக்கர வாகனத்தை யார் பெயரில் வாங்கி கொடுத்தேன் என்றால் எனது அண்ணன் பெயரில் வாங்கி கொடுத்தேன். தற்பொழுது வண்டி வாங்கியதற்கு கடன் கட்டாததால் அந்த வாகனத்தை 1–ம் எதிர்மனுதாரர் வீட்டில் இருந்த போது நிதி நிறுவனத்தினர் எடுத்துக்கொண்டனர். நான் சொல்வது போல் இருசக்கர வாகனம் எதுவும் எதிரிக்கு வாங்கி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதாரர் மற்றொரு பெண்ணிடம் தொடர்பில் இருப்பதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு தொடர்பில் இருப்பதாக கூறும் இவ்வழக்கில் நான்காம் எதிர்மனுதாரரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்க எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். மனுவில் திருமணத்தின்போது ஐம்பதாயிரம் ரூபாய் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். வீட்டில் 1ம் எதிர்மனுதாரர் துன்புறுத்தியது தொடர்பாக ஊர் முக்கியஸ்தர்களிடம் முறையிட்டேனா என்றால் முறையிட்டேன். அவ்வாறு முறையிட்டவர்களின் பெயர்கள் என்னவென்றால் குமார், மருதையன், ராஜேஷ், பாலுசாமி மற்றும் அழகையன் ஆகியோர்கள் ஆவார்கள். மேற்படி நபர்களின் பெயர்களை மனுவில் கூறியுள்ளேன் என்றால் இல்லை. நான் உண்மையில் அவர்களிடம் முறையிடவில்லை என்றால் சரியல்ல. நான் இதுசம்பந்தமாக கிராம முக்கியஸ்தர்களிடம் கூறியபோது அவர்கள் இருதரப்பினர்களையும் பேசி சுமூகமாக இருக்க சொன்னார்கள் என்று மனுவில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் திருமணமான எத்தனை மாதங்கள் 1–ம் எதிர்மனுதாரருடன் வாழ்ந்து வந்தேன் என்றால் 11 மாதம் வாழ்ந்து வந்தேன். அவ்வாறு வாழ்ந்த போது அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். அவ்வாறு புகார் கொடுத்ததற்கு ரசீது வைத்துள்ளேனா

என்றால் இல்லை. 31.01.2019–ம் தேதி நான் நான்கு மாதங்கள் கற்பகமாக இருந்ததாக மனுவில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் கற்பகமாக இருந்தபோது 1–ம் எதிர்மனுதாரர் மதுபாட்டிலால் அடித்து தாக்கியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அது தொடர்பாக புகார் கொடுத்தேனா என்றால் நன்னிலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் மனு ரசீது ஏதேனும் வாங்கினேனா என்றால் இல்லை. அதுபோன்று ஒரு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது கல்வி உதவி தொகையை 1–ம் எதிர்மனுதாரர் எடுத்துக்கொண்டதாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதாரர் என்னையும், எனது பிள்ளையையும் நல்லமுறையில் பராமரித்து வந்தார் என்றாலும், நான் தான் 1–ம் எதிர்மனுதாரர் குறைவாக படித்துள்ளார் என்ற காரணம் கூறி அவரை தரக்குறைவாக பேசிவிட்டு அவரது குடும்பத்தை சார்ந்தவர்களையும் அவதூராக பேசி தம்மிச்சையாக வீட்டை விட்டு வெளியேறினேன் என்றால் சரியல்ல. தற்பொழுதும் 1–ம் எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றாலும், நான் தான் அவரை வேறு ஒருவருடன் தொடர்பு படுத்தி பேசி அவதூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதாரரோ அவரை சார்ந்தவர்களோ எவ்வித துன்புறுத்தலும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் புகாருக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.07.19 04:42:47 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | DVC. No. 02/2020 |
| Deposition of witness | : | P. W – 2 |
| Name | : | தங்கபொண்ணு |
| Father's /Husband Name | : | வீரமணி |
| Village | : | திருவாஞ்சியம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 70 |
| Occupation | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 17th day June, 2025.
Accused R1, R2, R3 present. R4 exparte. R5 absent Petition U/s 355 filed and allowed.

**குறுக்கு விசாரணை :–**

வா.சா.1 எனது மூன்றாவது மகள் என்றால் சரிதான். அவரின் திருமண தேதி தெரியுமா என்றால் 2014–ம் வருடம் நடந்தது என்று மட்டும் தெரியும். முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் செய்தேன். நான் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஐந்து கையொப்பம் செய்தேன். நான் முதல் விசாரணையில் என்ன சீர்வரிசை செய்தேன் என்று கூறவில்லை என்றால் சரிதான். உண்மையில், நான் சீர்வரிசை எதுவும் செய்யாததால் தான் அதனை சொல்லவில்லை என்றால் சரியல்ல. தற்பொழுது வரை 1–ம் எதிர்மனுதாரர் அவரின் பிள்ளைகளுக்கு வேண்டியதை வாங்கி தந்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது மகளும், 1–ம் எதிர்மனுதாரரும் காதலித்த விபரம் திருமணத்தின்போது தான் தெரியவந்தது. திருமணத்திற்கு அழைப்பிதழ் தயார் செய்தோம் என்றால் செய்தோம். அந்த அழைப்பிதழை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளாரா என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 1–ம் எதிர்மனுதாரர் மனுதாரை அடித்து துன்புறுத்தியதாகவும், அவர் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பில் உள்ளார் என்றும், 1–ம் எதிர்மனுதாரர் என்னை தாக்கிவிட்டதாகவும் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்பொழுதும் 1–ம் எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளதை

பற்றி எனது கருத்து என்னவென்றால் எனக்கு விருப்பமில்லை. எனது மகள் அதிகமாக படித்துள்ளார் என்றும் அதனை காரணம் காட்டி 1–ம் எதிம்னுதாரரை அவதூராக பேசி வருகிறார் என்றால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதார் சேர்ந்து வாழவருவதாக கூறும் பெண்ணை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்க எனக்கு ஆட்சபேணை இல்லை என்றால் சரியல்ல. எங்கள் தரப்பிலும், அப்பெண்ணை சாட்சியாக விசாரிப்பதில் ஆட்சபேணை இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கும், புகாருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.07.19 04:43:06 +0530